செப்.15 அன்று கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் விழா

# காஞ்சிக்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வழியெங்கும் கோலாகல வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை!

காஞ்சிபுரம், செப்.12

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று காலை காஞ்சிபுரத்தில் நடைபெறும் கலைஞர் உரிமைத் தொகை வழங்கும் தொடக்க விழாவில் பங்கேற்க அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாநகருக்கு வருகை தரும் தமிழ்நாடு முதல் அமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் நகரிலிருந்து விழா நடைபெறும் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானம் வரை மாவட்டம் முழுவதும் வழிநெடுகிலும் கழகத்தினரும், பொது மக்களும் எழுச்சியுடன் திரண்டு நின்று கோலாகல மான முறையில் வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக காஞ்சிபுரம் மாவட்ட பொறுப்பு அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன் மற்றும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:





வரலாற்றுப் பெருமை வாய்ந்த காஞ்சிபுரம் மண்ணில் பிறந்து தனது அடுக்கு மொழி பேச்சாற்றலாலும் எழுத்தாற்றலாலும் அறிவாற்றலாலும் மக்களைக் கவர்ந்த மாபெரும் அரசியல் தலைவர் நம்மை எல்லாம் ஆளாக்கிய “காஞ்சி தந்த காவியத் தலைவன், உலகம் போற்றும் உத்தம தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரம் மாநகரில் செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் அன்று காலை 10.00 மணியளவில்,

2021 சட்டமன்றத் தேர்தலின் போது, கழக தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி, மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்கிடும் அற்புத திட்டமான கலைஞர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தின் தொடக்க விழா காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது.

இக்கோலாகலமான விழா நடைபெறும் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானத்தில் கடந்த 10 நாட்களாக பிரம்மாண்டமான மேடை, பந்தல் அமைக்கும் பணிகள் இரவு, பகலாக நடைபெற்று வருகிறது. இம்மாபெரும் பந்தலில் பயனாளிகள், பொது மக்கள், முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்டோர் அமர்வதற்காக தனித்தனியாக தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சரித்திரச் சிறப்புகளை பெறப் போகும் கலைஞர் உரிமைத் தொகை வழங்கும் தொடக்க விழாவில் பங்கேற்பதற்காக திருப்பெரும்புதூரை அடுத்த உளுந்தையிலிருந்து நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற செப்டம்பர் 15 அன்று காலை 8.00 மணியளவில் புறப்பட்டு காஞ்சிபுரத்திற்கு வருகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் மணிகூண்டு அருகில் திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் பேண்டு வாத்தியம் மேள தாளம் அதிர் வேட்டுகள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றிய கழகத்தினர் அனைவரும் திரளாக திரண்டு நின்று, எழுச்சி மிகு வரவேற்பு அளிக்க உள்ளனர்.

திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியத்தின் சார்பில் பிள்ளை சத்திரம் அருகில் செண்டை மேளம் பேண்டு வாத்தியம் அதிர் வேட்டுகள் முழங்க கழகத்தினரும், பொது மக்களும் எழுச்சியுடன் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர்.

அடுத்து, வாலாஜாபாத் வடக்கு தெற்கு ஒன்றியம், காஞ்சிபுரம் வடக்கு தெற்கு ஒன்றியம், காஞ்சிபுரம் மாநகரம் ஆகியவற்றின் சார்பில் வழியெங்கும் பொது மக்களும், கழகத்தினரும் பெருந்திரளாக கூடி நின்று மகிழ்ச்சியுடன் வரவேற்பு அளிக்க உள்ளனர்.

மொத்தத்தில் திருப்பெரும்புதூர் நகரிலிருந்து இவ்விழா நடைபெறும் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானம் வரை 40 கி.மீ. தூரத்திற்கு வழி நெடுகிலும் கழகத்தினரும், பொது மக்களும் எழுச்சியுடன் பெரும் கூட்டமாக கூடி ஆர்ப்பரித்து நின்று மகிழ்ச்சியுடன் வரவேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

திருப்பெரும்புதூரிலிருந்து காஞ்சிபுரம் வரை வழியெங்கும் முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்று சாலையின் இருமருங்கிலும் கழக கொடி, தோரணங்களும், வரவேற்பு பதாகைகளும், பொது மக்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில் அமைத்து, காஞ்சிபுரம் மாநகரில் இது வரை, இதுபோன்ற கோலாகலமான வரவேற்பு ஏற்பாடுகள் நடைபெற்றது இல்லை என்ற அளவிற்கு மிகவும் பிரம்மாண்டமான முறையில் கழகத்தினர் அனைவரும் இணைந்து ஒற்றுமையுடன் வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பல்லவ மன்னர்களின் ஆட்சிக் காலத்தில், வாதாபி நகரை வென்று, வெற்றியுடன் காஞ்சிபுரம் மாநகருக்கு திரும்பிய நரசிம்ம பல்லவ மாமன்னன் பெற்ற நல்லதொரு வரவேற்பையும் மிஞ்சிடும் வகையில், தமிழர் நல்வாழ்வே, தம் வாழ்வு என்று அல்லும் பகலும் தமிழ்நாட்டு மக்களுக்காக உழைத்து வரும் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், மாண்புமிகு திராவிட மாடல் முதல்வர், நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு தெற்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டுமொத்த கழகத் தோழர்கள் அனைவரும் தமது கரங்களில் கழகத்தின் இலட்சிய இரு வண்ணக் கொடியை ஏந்தி, காஞ்சிபுரம் மாநகரமே இதுவரை கண்டிராத வகையில் கழகத்தினரும், பொது மக்களும் பல்லாயிர கணக்கில் வழிநெடுகிலும் திரண்டு நின்று,

காஞ்சிபுரம் மாநகர வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கக் கூடிய அளவிற்கு, இது வரை இப்படியொரு வரவேற்பு எப்பொழுதும் அளித்தது இல்லை என்று வரலாற்று சரித்திர சாதனை படைக்கும் அளவிற்கு, வழியெங்கும் அலை கடலென அணி திரண்டு நின்று கோலகலமான வரவேற்பை அளித்து சரித்திரம் படைப்போம் வாரீர் ! வாரீர்!! என்று அன்புடன் அழைக்கிறோம்.

அத்துடன் வரலாற்றில் இடம் பெறப் போகும் மகளிருக்கு கலைஞர் உரிமைத் தொகை வழங்கும் தொடக்க விழாவில், “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் வைர வரிகளுக்கு ஒப்பாக, காஞ்சிபுரம் வடக்கு தெற்கு மாவட்டம் முழுவதிலிருந்து மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளு மன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்,

கழக அணிகளின் மாவட்ட மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் மற்றும் பொது மக்கள் ஆகியோர் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து, தமிழ்நாடே போற்றிப் பாராட்டும் வகையில், மக்கள் அனைவரும் பார்க்க கண் கொள்ளா காட்சியாக இருந்திடும் வகையில், பெருந்திரளாக கலைஞர் உரிமைத் தொகை வழங்கும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று இருகரம் கூப்பி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த இரண்டரை ஆண்டுகளில், தமிழ்நாட்டு மக்களுக்காக பல எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி, நாடே போற்றி பாராட்டும் வகையில், நல்லாட்சி நடத்தி வரும், நம்முடைய ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் இம்மாபெரும் தொடக்க விழாவில் கலந்து கொள்வது,

“நமது உரிமை” “நமது கடமை” என்ற அந்த உணர்வோடு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத் தோழர்கள் அனைவரும் செப்டம்பர் 15ஆம் தேதி காலை 8.30 மணிக்கெல்லாம் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில் அலைகடலென திரண்டு குவிந்திட வேண்டும் என்று அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

விழா மேடையிலிருந்து பார்க்கும் போது, கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மக்கள் கடல் வெள்ளம் புகுந்தது போல காட்சியளிக்கின்ற வகையில் மாவட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த கழகத்தினரும், பொது மக்களும் பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்து பங்கேற்று, பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்போம் என இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.



தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 49வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தெருமுனை கூட்டம் (ம) நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மேற்கு தாம்பரம் அண்ணா தெருவில் பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் தலைமையிலும் ஆர்.சீனா வரவேற்பிலும் மு.ரமேஷ், அ.சதிஷ்குமார், இ.குமார், மோ.லட்சுமி, எஸ்.எஸ்.பாலாஜி, கோ.ராஜேந்திரன், அ.ர.பாஸ்கர், பாலா, வே.குருமணி, விக்டர் சார்லஸ், அரவிந்த், இ.நவீன்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக பொருளாளர், நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி எழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, 5வது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இ.கருணாநிதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

# செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம்!

## பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், செப். 12

செம்பாக்கம் வடக்கு பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (12.9.2023 செவ்வாய்க்கிழமை) மாலை 7 மணிக்கு, ராஜேந்திர பிரசாத் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ வாரி திருமண மண்டபத்தில் பகுதி அவைத் தலைவர் ஏ.வீரபத்திரன் தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் செயலாளர் இ.கருணாநிதி கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்.

அது சமயம் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: 15.9.2023 பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் மகளிர் உரிமை தொகை வழங்க காஞ்சிபுரம் வருகை தரும் முதல்வர் விழா சம்பந்தமாகவும், 16.9.2023 தெருமுனை பிரச்சாரம் குறித்து ஆலோசனை, 17.9.2023 தந்தை பெரியார் பிறந்த நாள் விழா சம்மந்தமான ஆலோசனை குறித்தும், கழக அக்கப் பணிகள்.

இவ்வாறு செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

